பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

21 12 2025 SUNDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அஸ்ஸாமில் 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான உர உற்பத்தி திட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

2. வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறை மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை தெரிவிக்குமாறு மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. சர்வதேச தியான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. ஐ.நா பாதுகாப்பு சபையில் தேவையான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று எகிப்து அதிபர் திரு. Abdel Fattah El Sissi வலியுறுத்தியுள்ளார்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான ஜெர்மனி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Mithes Rameshwaran பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

அஸ்ஸாமில் 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான உர உற்பத்தி திட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

இரண்டு நாள் பயணமாக அஸ்ஸாம் சென்றுள்ள அவர், அங்கு நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

இதனையடுத்து, பிரம்மபுத்திரா நதியில் உள்ள சுற்றுலா கப்பலில் தேர்வு குறித்த அச்சத்தை களையும் வகையில், பள்ளி மாணவர்களுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

அஸ்ஸாம் இயக்கத்தில் தங்களது இன்னுயிரை நீத்த, 860 வீரர்களின் நினைவாக கட்டப்பட்டுள்ள தியாகிகள் நினைவிடத்திற்கு சென்று திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்துகிறார்.

>>>>>><<<<<<

வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறை மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை தெரிவிக்குமாறு அத்துறைக்கான அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு, எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

வேளாண் பணிகளை திறம்பட மேற்கொள்ள ஏதுவாக விவசாயிகள், துறைசார்ந்த நிபுணர்கள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் சிறந்த செயல்திட்டங்களை வகுக்க வேண்டும் என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

அஞ்சல் அலுவலகங்களில் வங்கி மற்றும் காப்பீடு சேவைகள் உட்பட பல்வேறு சேவைகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய தொலைத்தொடர்பு துறை இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம், அமராவதியில், இளைஞர்களை ஈர்க்கும் வகையில் நவீனமயமாக்கப்பட்ட அஞ்சல் அலுவலகத்தை திறந்து வைத்து பேசினார்.

மாணவர்களிடையே அஞ்சலக செயல்பாடுகளை பிரபலப்படுத்துவதில் இத்தகைய நடவடிக்கைகள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் முறையில் காப்பீடு போன்ற நிதிசார் சேவைகள் இத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிடும் என்று திரு. பெம்மசானி சந்திரசேகர் கூறினார்.

>>>>>><<<<<<

அரசு நிறுவனங்கள், அரசியலமைப்புச் சட்டத்தின் மாண்புகளை உறுதி செய்யும் வகையில் செயல்பட வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. Surya Kant தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், நீதிமன்ற நடைமுறைகள் மற்றும் தீர்ப்புகள் மக்களுக்கு எளிதில் புரியும் வகையில் அவர்களது தாய்மொழியில் இருக்க வேண்டும் என்று கூறினார்.

மொழி தொடர்பாக, அரசியலமைப்பு சட்டத்தில் கூறியுள்ள விதிமுறைகளின் படி அரசு செயல்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

உச்சநீதிமன்ற தீர்ப்புகள் 16 மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கியுள்ளதாக தலைமை நீதிபதி திரு. Surya Kant தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

சர்வதேச தியான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஆழ்மனதில் அமைதியை ஏற்படுத்த தியானம் அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையில், ஆண்டு தோறும் டிசம்பர் 21ஆம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, நியூயார்க்கில் உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான தியானம் - என்ற தலைப்பில், இந்தியாவை சேர்ந்த ஆன்மிக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் தலைமையில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்தியா, அண்டோரா, மெக்ஸிகோ, நோபளம், இலங்கை உள்ளிட்ட நாடுகளிலும் தியான தினம் இன்று கடைபிடிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

வாட்ஸ் ஆப் செயலியிலிருந்து பயனாளர்களின் தரவுகளை சட்டவிரோதமான பயன்படுத்தப்படுவதை தடுப்பது குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இந்த செயலியை பயன்படுத்துவோர், மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

வாட்ஸ் ஆப் வாயிலாக வரும் செய்திகளின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்வதன் மூலம், தவறான பயன்பாட்டை தவிர்க்க உதவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கு இடமான இணைப்புகளையோ, மொபைல் எண்களையோ பயன்படுத்த வேண்டாம் என்று அந்த அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஐ.நா பாதுகாப்பு சபையில் தேவையான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று எகிப்து அதிபர் திரு. Abdel Fattah El Sissi வலியுறுத்தியுள்ளார்.

கெய்ரோவில் நடைபெற்ற ரஷ்யா – ஆப்பிரிக்கா ஒத்துழைப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு

காண்பதில் ஆப்பிரிக்கா போன்ற பெரிய நாடுகளின் பங்களிப்பு அவசியம் என்று தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு. Sergey Lavrov மற்றும் 50க்கும் மேற்பட்ட ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**>>>>>><<<<<<**

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பாக, தீக்குளித்து உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு உரிய பதிலை அளிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கு மாநில அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, சென்னை வந்த பிஜேபி தேசிய செயல் தலைவர் திரு. நிதின் நபினுக்கு விமான நிலையத்தில் பிஜேபி கட்சியினர் வரவேற்பு அளித்தனர்.

**>>>>>><<<<<<**

மொழிகள் இலக்கியத்திற்கான பாலமாக திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி, ஆரோவில்லில் நடைபெற்ற இலக்கிய திருவிழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், இங்கு சமஸ்கிருதம், தமிழ், பிரெஞ்ச் மற்றும் ஆங்கில மொழிகள் அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

60க்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து வாழும் இந்த ஆரோவில், இலக்கியம் மற்றும் மொழி பெயர்ப்புக்கான தனித்துவ களமாக திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

மனிதகுலத்தின் ஆன்மாவாக இலக்கியம் திகழ்கிறது என்றும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

விவசாயிகளை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில் பாரத ஸ்டேட் வங்கி செயல்பட்டு வருவதாக வங்கி துணைப் பொது மேலாளர் திரு. பெனுதர் பாரி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில், ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் நடைபெற்ற பாரத ஸ்டேட் வங்கியின் விழிப்புணர்வு வார விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில், விவசாயிகளுக்குத் தேவையான கடனுதவிகள் வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

விவசாயிகளின் மேம்பாட்டிற்கு பாரத ஸ்டேட் வங்கி உறுதுணையாக இருக்கும் என்று திரு. பெனுதர் பாரி தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

மஹாராஷ்ட்ராவில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி இன்று காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

அம்மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் 143 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக இத்தேர்தல் நடைபெற்றது.

**>>>>>><<<<<<**

உத்தரபிரதேசம், ஜார்கண்ட் மற்றும் பீகாரில் ஒருசில இடங்களில் இன்று கடும் பனிப்பொழிவு நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இமயமலையின் மேற்குப் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு பனிப்பொழிவு இருக்கும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு - காஷ்மீர், லடாக் பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்று கடும் பனிப்பொழிவு இருக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தில்லி, உத்தராகண்ட், ஹரியானா, சண்டிகர், மேற்கு உத்திர பிரதேசம், வடக்கு மத்திய பிரதேசம் மற்றும் பீகாரில் கடும் பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளது என்றும், தில்லியில் காற்றின் தரக் குறியீடு 405 ஆக உள்ளது என்று மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஜெர்மனி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Mithes Rameshwaran பட்டம் வென்றார்.

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி போட்டியில் அவர், 21-17, 17-21, 21-13 என்ற செட் கணக்கில் போர்ச்சுகலின் Tiago Berenguer-ஐ வென்று கோப்பையைக் கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

சீனாவின் Hong Zhou நகரில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில்  நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி காலை மணி 10.30 - க்குத் தொடங்குகிறது.

**>>>>>><<<<<<<**

இந்தியா - இலங்கை இடையேயான முதலாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

விசாகப்பட்டினத்தில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில், முதல் 2 போட்டிகள் விசாகப்பட்டினத்திலும், அடுத்த 3 போட்டிகள் திருவனந்தபுரத்திலும் நடைபெறும்.

>>>>>>END<<<<<<<